மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. என். கே. பழனிசாமி அவர்கள்

'the sudden stoppage of drought relief measures in Coimbatore district and consequent dislocation of millions of people and the acute drinking water scarcity prevailing in that district'

என்பது பற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) வறட்சி நிவாரண நிதிக்கு, வசூல் செய்வதில், அருப்புக்கோட்டை போன்ற மிக பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்தும்கூட வருவாய்த் துறை, விற்பனை வரித் துறை அதிகாரிகள் கட்டாய முறையை பின்பற்றுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும்

'serious situation arising out of coercive methods adopted by Revenue and Sales Tax Officials for Government-sponsored drought relief fund even in most affected areas like Aruppukottai Taluk'

என்பதுபற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசுத் தரப்பில் மறுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) குடிதண்ணீர் பற்றாக்குறையும், மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிரம நிலையையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும்.

" தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் குடிதண்ணீர் பற்றாக்குறையால் குறிப்பாகச் சென்னை நகரில் உள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள மிகச் சிரமமான நிலைமை குறித்து விவாதிக்க "

என்று ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தினால் அனுமதி தர மறுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. என். கே. பழனிசாமி அவர்கள்

'the acute drinking water scarcity and as a result of which the untold misery experienced by the people of Madras City'

என்பதுபற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே சொன்னதுபோல இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதனால் நான் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள் கிராமங்களில் கட்டாயமாக கட்டுப்பாடு விதை நெல்லை கொள்முதல் செய்வதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள்

" தஞ்சை மாவட்டத்தில், லெவி கொள்முதல் செய்து முடித்த பிறகு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள் சில கிராமங்களில் வீடுகள்தோறும் சென்று கட்டாயமாக கட்டுப்பாடு விதை நெல்களை கொள்முதல் செய்வதால் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து"

விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார். அரசு தரப்பில் இது மறுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கும் அனுமதிதர மறுக்கிறேன்.

(உ) அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் முப்படாதி என்பவர் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ச. சங்குமுத்து தேவர் அவர்கள்,

" அம்பாசமுத்திரம் தொகுதி, அயன்சிங்கம்பட்டியில் வசித்து வந்த இ. முப்படாதி என்பவர் கோதையாறு மின்வாரியத்தில் வேலை பார்த்து வந்தார். 20—4—1975-ஆம் தேதி மாலை அம்பாசமுத்திரம் உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர், மற்றும் போலீஸ் அதிகாரிகள் அம்பை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்துள்ளார்கள். 21-ந் தேதி காலை முப்படாதி என்பவர் இறந்துவிட்டதைக் குறித்து விவாதிக்க"

என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.